*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.09

# Domestic Cultural Practices of the Hero and Heroine in Kuruntogai

**A. Revathi**[1*], **Dr. K. Devibhooma,**[2],

[1]Full-time Ph.D. Research Scholar, Centre for Advanced Research in Tamil, Mannar Thirumalai Naicker College (Autonomous), Pasumalai, Madurai - 625004.

[2]Centre for Advanced Research in Tamil, Mannar Thirumalai Naicker College (Autonomous), Pasumalai, Madurai - 625004.

[*]Correspondence: revathisaro1994@gmail.com, Tel: +917358319616

**Article Info**
Received on 27-May-2026, Revised on 29-May-2026, Accepted on 29-May-2026, Published on 01-June-2026

## ABSTRACT

Kuruntogai, one of the seminal works in the Ettuthokai (Eight Anthologies), elegantly delineates the intricacies of Agathinai (the theme of inner life). It profoundly captures the essence of the Kalavu (pre-marital love) and Karpu (post-marital/conjugal life) experiences of the hero and heroine. Domestic life (Illaravazhkkai) served as the very lifeblood of Sangam society. This research aims to explore the cultural ethos of that era, highlighting how husbands and wives lived in mutual harmony through sacrifice, the nurturing of children, and the practice of hospitality. Furthermore, this study examines how the text serves as a mirror to the societal values and ethical frameworks that governed the family unit, illustrating the enduring significance of marital devotion and social responsibility as depicted in ancient Tamil poetry.

***KEYWORDS:*** *Kuruntogai, Sangam Literature, Domestic life, Agathinai, Tamil culture.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

# குறுந்தொகையில் தலைமக்களின் இல்லற பண்பாடுகள்

[1]**அ.ரேவதி,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),

பசுமலை, மதுரை-625004.

[2]**முனைவர் கோ.தேவிபூமா,** தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி), பசுமலை, மதுரை-625004.

**ஆய்வுச் சுருக்கம்**

எட்டுத்தொகை நூல்களில் அகத்திணையைச் சார்ந்த நூல் குறுந்தொகையாகும். குறுந்தொகை தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்வின் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றது. சங்க கால மக்களின் வாழ்வின் உயிர் நாடியாக விளங்குவது இல்வாழ்க்கை. இல்லறத்தில் கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் விட்டுக் கொடுத்தும் குழந்தைகள் பெற்று விருந்தாற்றித் தொண்டு செய்தும் வாழ்ந்தனர் என்ற பண்பாட்டினை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

**முன்னுரை**

சங்க அக இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்வின் சிறப்புகளை வெளிப்படுத்துகிறது. ‘களவு’ என்பது காதல் அமைவதற்கு ஒரு வாயில். அது காதலின் அரும்புப் பருவம். யாரும் அறிந்திடாமல் மறைவாகக் காதல் புரிவதால் களவு எனப்படட்டது. தலைவன் தலைவி இருவருக்குமான இயல்பின்பத்தை விளக்கும் விதமாக களவு வாழ்க்கை அமைகின்றது. திருமணத்திற்குப் பிந்தைய உறவு ‘கற்பு’ என வழங்கப்படும். களவின்றி கற்பு அமைவதில்லை. கற்பென்றால் பலரும் அறிந்து திருமணம் செய்து கொண்டும் கணவன் மனைவியாகி பொருளீட்டி விருந்தோம்பி நன்மக்களைப் பெற்று வாழ்வது ஆகும். இவ்வாறு தலைமக்கள் இருவரும் சிறப்பான இல்லறத்தைப் பண்பாடோடு செயல்படுத்தியதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இல்லற பண்பாடு**

சங்க இலக்கியத்தின் உயிர் நாடியாக விளங்குவது இல்லறம். கட்டுப்பாடற்ற காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்தவர்கள் இல்லறம் என்ற இனிய வாழ்விற்குள் நுழையக் காதலே அடிப்படையாகத் திகழ்கின்றது. காதலர்களாய் சந்தித்தவர்கள் தம்பதிகளாய்க் கைகோர்த்து இல்லறத்தில் சிறப்புறுகின்றனர்.

இத்தகைய இல்லறத்தில் கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் வாழ்ந்தும்

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

புரிந்தும் ஏற்றுக் கொண்டும் விட்டுக் கொடுத்தும் குழந்தைகள் பெற்று விருந்தாற்றியும் தொண்டு செய்தும் வாழ்ந்தனர். அறம் ஓம்பி இல்வாழ்வினை நடத்துவதே சிறந்த இல்லறப்பண்பாடு ஆகும்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"[1]**

**(குறள் -45)**

என்ற குறள் மூலம் அறிய முடிகின்றது.

இல்லறம் என்னும் நல்லறத்தில் அடியெடுத்து வைத்துள்ள புதுமணத்தம்பதியர் வாழ்க்கையில் பண்பாடு வெளிப்படும்.

தலைவி ஒருத்தி தன் அன்புக் கணவனுக்குத் தானே உணவு சமைக்கிறாள். சமைத்து முடித்த பின் தனது கணவனை அமுதுண்ண அழைக்கிறாள். அதனை உண்ட அனோ இனிமை மிக இனிமை எனப் பாராட்டிக் கூறுகின்றான். கணவனின் மொழி கேட்ட அப்பெண்ணின் முகத்திலே மகிழ்ச்சி தோன்றுகிறது. புன்முறுவல் செய்கின்றாள்.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிது எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"[2]**

**(குறுந்தொகை -167)**

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது. இதன்மூலம் கணவன் மனைவி இருவரின் அன்பை உணர முடிகிறது.

இல்லறக் கடமைகளைச் செவ்வனே செய்து வாழ்வதே சிறந்த அறநெறியாகும். கம்பராமாயணத்தில் இராமன் காடு செல்ல நேர்ந்த போது சீதை.

**"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு"[3]**

**(கம்பராமாயணம் பா.1827)**

என்று கூறி கணவன் பின்னே செல்கிறாள். இது கணவன் மனைவியிடையே அன்பான பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

**தலைவியின் குணப்பண்பு**

குடும்பத்தில் கணவன் மனைவியிடையே சிற்சில தவறுகள் ஏற்படுவது வழக்கம். அவற்றை

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

மற்றவருக்கு வெளிப்படுத்தி மீண்டும் பிரச்சனையை வளர்க்காமல் குடும்பத்தின் நல்லுறவிற்காகவும் அமைதிக்காகவும் இருவரும் மறைத்து விடுவதும் உண்டு. குறுந்தொகையில் தலைவன் பரத்தையரைப் போற்றும் கொடுமையை மற்றவருக்குப் புலப்படுத்தாமல் மன்னிக்கும் மனப்பக்குவத்தோடு அமைதி காக்கும் தலைவியின் குணத்தைக் காண முடிகிறது.

**“தண்ணம் துறைவன் கொடுமை**
**நம்முள் நாணிக் கரப்பா டும்மே”[4]**

**(குறுந்தொகை-9)**

இவ்வரிகள் தலைவியின் குணத்தின் பண்பே வெளிப்படுகிறது. மேலும்

தலைவன் பரத்தை வீடு சென்று விட்டு வரும் போது அதனைக் கருத்தில் கொள்ளாது தலைவன் நாணும்படி தன் அன்பு முழுவதும் தோன்றும்படி தலைவி எதிரே சென்று வரவேற்றாள். இதனைக்

**“காஞ்சி ஊரன் கொடுமை**
**கரந்தனள் ஆகலின் நாணிய வருமே”[5]**

**(குறுந் -10)**

குடும்பத்தில் மனைவிக்குப் பிறகு மிகப்பெரிய பொறுப்பு தலைவனுக்கு உரியது. குறுந்தொகையில் விளங்கும் தலைவன் தலைவியின் இன்ப வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு எல்லாவற்றிலும் தானே முதன்மையானவனாக நின்று வழிநடத்துபவனாக காணப்படுகின்றான். ஆண்களுக்கு உயிராக முதன்மையான செயலாக அமைவது அவர்கள் மேற்கொள்ளும் தொழில். அவை

**“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”[6]**

**(குறுந்தொகை -135)**

என்று உணர்த்துகின்றது. அவை திருக்குறளில்

**“இன்பம் விழையான் வினைவிழைவான் தன்**
**துன்பம் துடைத்தான்னும் தூண்”[7]**

**(திருக்குறள்-615)**

வள்ளுவரும் இன்பத்தை விரும்பி அலையாது தொழிலை விரும்பி உண்மையாக செய்து வாழ்பவனே துன்பம் துடைக்கும் தூணாக வாழ்பவன் எனக் கூறியுள்ளார்.

**“ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

**இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**

**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**

**இரைகொண் டமையின் விரையுமால் செலவே"[8]**

**(குறுந்தொகை-92)**

வளைந்த சிறகினை உடையபறவைகள் தங்குவதற்குப் பொருத்தமாய் உயர்ந்து ஓங்கி வளர்ந்த பெருவழிச் சாலையின் அருகே நிற்கும் கடப்ப மரத்தின் கூட்டிலுள்ள குஞ்சுகளின் வாயினுள் ஊட்டுவதற்காகத் தன் அலகில் இரையை எடுத்துக் கொண்டு சூரியன் மறைந்த மாலைக் காலத்தில் அகன்ற இடமுள்ள வானத்தில் விரைந்து செல்லும் பறவை மிகவும் இரங்கத்தக்கன. பொருள் வாயிற் பிரியும் தலைவன் கல்வி கேள்வி முதலிய குணங்களோடு வீரத்தன்மை கொண்டவனாகவும். தலைமக்களின் இன்ப வாழ்க்கைக்குப் பொருள் மிகவும் அடிப்படை என்பதை பறவை மூலம் உணர்த்துகிறது.

**தலைவியின் உலகமான தலைவன்**

ஆண் பெண் உறவு என்பது பிரிவு காலத்திலேயே மிகுந்த வலிமையுடன் இருக்கிறது. தலைவனின் பிரிவினால் தனிமையில் வருந்தும் தலைவி மிகவும் வாடியிருப்பாள்.

காலத்தாலும் இடத்தாலும் ஏற்படும் பிரிவால் உணவு உறக்கம் விளையாட்டு உறைவிடம் உடனுறையும் வாழ்க்கை இவையாவும் தனக்கு இன்பத்தைக் கொடுக்கவில்லை என்று வருந்துகின்றாள் தலைவி இதனைப்

**"புன்கண் மாலையும் புலம்பும்**

**இன்றுகொல் தோழி அவர் சென்ற நாடே"[9]**

**(குறுந்தொகை -46)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதிலிருந்து அனைத்துச் செயல்களையும் தலைவனுடன் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தலைவியின் ஆசை வெளிப்படுகின்றது. தலைவனே உலகம் என்று வாழ்ந்தவர்களுக்குத் தலைவனின் பிரிவால் வருத்தம் மிகுந்திருப்பதையும் காண முடிகிறது.

**"பூஇடைப் படினும் யாண்டுகழிந் தன்ன**

**நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்**

**பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு**

**உடன்உயிர்போகுக தில்லகடன் அறிந்து**

**இருவேம் ஆகிய உலகத்து**

**ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே"[10]**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm12012026*

**(குறுந்தொகை -57)**

மகன்றிற் பறவை என்ற நீர்வாழ்பறவை இணைந்தே வாழும் தம்மிடையே ஒரு பூவிழுந்து இடைவெளி ஏற்பட்டாலும் ஓர்ஆண்டுகழிந்தது போன்று வருந்தும். அப்பறவையின் புணர்ச்சி போல பிரிவு என்பது அறியாத குறைவு படாத அன்பின் மிகுதியோடு இல்லறக் கடமைகளை ஆற்றுதற் பொருட்டு இருவராகப் பிறந்து இவ்வுலகில் ஒருவராகி வருந்தும் நிலையில் இருந்து ஒன்று பட்டு எங்கள் உயிர்போவதாக என் விருப்பம் என்று தலைவி தலைவன் தான் எல்லாம் என்று பாடல்வரிகள் உணர்த்துகிறது.

**தலைவனின் அன்பு**

அன்புவயப்பட்ட காதலர்கள் இருவரும் இதயத்தால் ஒன்றுபடுகின்றனர். ஒன்றாகக் கூடி இன்புற்று வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். இளமை நாள் வயது செல்லச் செல்ல கழிந்து கொண்டே போவது உண்மை போன இளமையை மீட்டுத்தரும் சக்தி எதற்கும் கிடையாது. ஆகவே இளமையின் இன்பத்தினை ஒன்றியிருந்து அனுபவித்து மகிழ்தல் சிறந்தது. பிரிந்து சென்று இளமையும் இன்பமும் கெடச் செய்வது தவறு.

தலைவன் களவு காலத்தில் செய்த நல்ல செயல்கள் சிறிதும் மாறாமல் கற்புக் காலத்தில் இன்றளவும் அதே அன்போடு இருப்பதால் தான் தலைவியின் அழகும் மாற்றமில்லாமல் பொலிவுடன் காணப்படுகின்றது. அவை

**"தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்**
**மண்தனன் மன்எம் தோளே**
**இன்றும் முல்லை முகைநா றும்மே"[11]**

**(குறுந்தொகை-193)**

என்ற வரிகள் மூலம் தலைவன் களவு காலத்தில் தலைவியின் தோள்களைத் தழுவினான். அதனால் இன்றும் அவனுடைய மேனியினது மணம் முல்லை மலர்களின் மணத்தைப் போன்று என்தோள்களில் வீசிக் கொண்டு இருக்கும் என்றும் தலைவன் களவுக் காலத்தில் செய்த செயல்கள் இன்று வரையிலும் மாறாமல் நின்று என்னைப் பாதுகாக்கின்றது என்று கூ றுகின்றாள் தலைவி. இதிலிருந்து தலைவனது அன்பின் பண்பை உணர்த்துகிறது. தலைவி அன்றும் இன்றும் நினைத்து மகிழ்ந்து பெருமைப்பட விளங்குவதை அறிய முடிகின்றது. மேலும் தலைவன் தலைவி மீது வைத்திருக்கும் அன்பு எக்காலத்திலும் மாறாதிருப்பதையும் இது வெளிப்படுத்துகின்றது.

**விருந்தோம்பல்**

தமிழரின் பாரம்பரியப் பண்புகளுள் ஒன்றாகத் திகழ்வது விருந்தோம்பல் ஆகும். தம் வீட்டிற்கு

,| Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

விருந்தினராக வந்தவர்க்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அமுது படைத்துத் தம் பெருமையை நிலைநாட்டுவது தமிழரிபண்பாகும்.

தொல்காப்பியர் தம் நூலில் விருந்தே புதுமை என்று குறிப்பிட்டுள்ளார். புதியோரைப் போற்றுதலே விருந்தோம்பலின் சிறப்பு கணியன் பூங்குன்றனாரின்

**"யாதும் ஊரே யாவரும் கேளீர்"[12]**

**(புறம்-19)**

என்னும் பாடலடியும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. திருக்குறளில்

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[13]**

**(குறள்- 81)**

என்கிறார். திருவள்ளுவர்.

விருந்தினர்களைக் கண்டவுடன் இல்லத்தில் எதிர் சென்று வரவேற்றுப் போற்றும் நல்லோர்கள் இருந்ததையும் காணமுடிகிறது. மேலும் விருந்தினருக்கு விடை கொடுத்து அனுப்பும்போது குதிரைப் பூட்டிய தேரினைக் கொடுத்து ஏழடி பின் தொடர்ந்து சென்று வழியனுப்புதல் பண்டைய வழக்கமாகும்.

**"பொலம்படைப் பொலிந்த வெண்தேர்ஏறிக்"[14]**

**(குறுந்-205)**

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

இவை பண்டைத் தமிழர்களின் தலையாய பண்பாட்டுச் சிறப்பினை உணர்த்துவதாகும். தலைவன் வினைமுடித்து மீண்டுவரும் நாளில் தலைவி அவனுக்கு விருந்தளித்துச் சிறப்பிக்கின்ற செய்திகள் பயின்று வந்திருக்கின்றன.

**"மாலைநனி விருந்து அயர்மார்**
**தேர்வரும் என்னும் உரைவா ராதே"[15]**

**(குறுந்-155)**

மரங்கள் செறிந்து வளர்ந்த குறுங்காட்டில் தேரில் கட்டிய மணிகள் ஒலிக்கும்படி அருவழியைக் கடந்து விருந்து மிகப்புரியும் பொருட்டு தலைவனுடைய தேர் வருகின்றது என்ற செய்தி மட்டும் தலைவிக்கு வரவில்லை. தலைவன் தன்னருகே இல்லாத காரணத்தால் தலைவியால் விருந்தோம்பல் செய்ய முடியவில்லையே என்னும் வருத்தம் மிகுகிறது. இத்தலைவியைப் போல கோவலனைப் பிரிந்து தனித்திருந்த கண்ணகி விருந்தோம்பல் செய்ய முடியாத நிலையில் வருந்திக்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

கூறுவதை சிலப்பதிகாரம் உயர்த்துவது

**"விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[16]**

**(சிலப்.கொடை-73)**

ஆகவே பண்பாட்டை விளக்கும் விருந்தை தலைவனுக்கு கொடுக்கமுடியாமல் தலைவி வருந்து நிலையையும் காணப்படுகிறது.

**மக்கட்பேறு**

இல்வாழ்க்கையின் தலையாயப் பயன் மக்கட்பேறு. ஒரு அழகான குடும்பத்தை உருவாக்க முடியும். மழலைச் செல்வங்களைப் பெறும் பொழுதுதான் இல்லற வாழ்க்கை இனிமையும் முழுமையும் அடைகிறது.

**"புதல்வற் தழீஇயினன் விறவலன்**
**புதல்வன் தாய் அவன் புறம்கவைஇ யினளே"[17]**

**(குறுந்தொகை-359)**

தந்தை தாய் சேய் ஆகிய மூவரின் அன்பு வெளிப்படுகிறது. மேலும் ஒரு பெண் திருமண வாழ்வின் முழுப்பயனை அடைகிறாள் என்றால் தாய்மையினால் தான். குழந்தைகள் துயில் கொள்ளும் போது தந்தை குழந்தைகளின் அருகில் சென்று அவர்களை அணைத்து மகிழ்வதும் வழக்கமாக உள்ளது. குறுந்தொகையிலும் புதல்வன் உறங்குவதை அறிந்த தலைவன் அங்குசென்று தானும் புதல்வனை அணைத்த வண்ணம் அழகிய கட்டிலில் படுத்திருந்ததும். தலைவி புதல்வனோடு தலைவனையும் அணைத்தபடியே மகிழ்ந்துறங்கியதும் போன்ற நிகழ்வுகள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

தலைமக்களின் உறவு உடம்போடு இயைந்த உயிர்போன்றது ஆகும். அதாவது தலைவன் தவறுகள் செய்தவிடத்தும் அதைப் பொறுத்து மன்னித்து ஏற்றுக்கொள்ளுதலே சிறந்த இல்லொழுக்கமாகச் சுட்டப்படுகிறது. இல்வாழ்க்கையின் சிறந்து கூறப்படுவது பண்பாடுகளை ஆகும்.

காதலர்களாய் சந்தித்தவர்கள் தம்பதிகளாய்க் கைக்கோர்த்து இல்லறத்தில் சிறப்புற்றனர். குடும்பத்தில் மனைவிக்குப் பிறகு மிகப்பெரிய பொறுப்பு கணவனுக்கே உரியதாகும். தலைவன் களவு காலத்தில் இருந்த அன்பு மாறாமல் கற்பு காலத்திலும் அன்போடு செயல்படுகிறான். இல்வாழ்க்கை மகட்போறு அடையும்போது ஒரு அழகான குடும்பத்தை உருவாக்கியுள்ளது. இல்வாழ்க்கையின் மிகச்சிறந்த பண்பு விருந்தோம்பல் அவை சங்கப் பண்பாட்டையும் தலைமக்களின் பண்பையும் எடுத்துக்கூறுகிறது.

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

**அடிக்குறிப்பு**

[1]. திருக்குறள் புலவர்மு. தாசன் -பா-45

[2]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-167

[3]. கம்பராமாயணம் பேராசிரியர் அ. ஞானசம்பந்தன் -பா-1827

[4]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-9

[5]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-10

[6]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-135

[7]. திருக்குறள் புலவர் மு. தாசன் -பா-615

[8]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-92

[9]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-46

[10]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-57

[11]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-193

[12]. புறநானூறு முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் -பா-19

[13]. திருக்குறள் புலவர் மு. தாசன் -பா-81

[14]. குறுந்தொகை முனைவர் வி. நாகராசன் -பா-205

[15]. குறுந்தொகை முனைவர் வி. நாகராசன் -பா-155

[16]. சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை இளங்கோவடிகள் -பா-73

[17]. குறுந்தொகை அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் -பா-359.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam